## குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் மேட்டூர்

**STC.No. 1763/2019** **நாள் 23.09.2022**

**ம.சா. 3 மாதேஸ்குமார், Manager, Karur Vaisya Bank, Namakkal Main Branch**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் கரூர் வைஸ்யா வங்கி நாமக்கல் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்கிறேன். மஞ்சு காண்ட்ராக்ட்டர்ஸ் என்ற நிறுவனத்தின் பேரில் நடப்பு கணக்கு எண். 1170115000005180. ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்கள் எங்களது வங்கியில் இருந்து வழங்கப்பட்டவை. மேற்படி இரண்டு காசோலைகளும் 10.01.2019 ந்தேதியன்று வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி இரண்டு காசோலைகளும் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது. வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என புகார்தாரரின் வங்கியான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுக்கு திருப்பப்பட்டது. தாக்கல் செய்யப்பட்ட அன்றையதினமே திருப்பப்பட்டது. **(அதற்கான Statement of Account ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனக்கு எந்த வழக்கு எண்ணிற்காக சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் STC 1763/2019 என்ற வழக்கிற்காக அழைப்பாணை வந்தது. அழைப்பாணையில் என்ன விவரம் கேட்டு சார்வு செய்யப்பட்டது என்றால் மஞ்சு காண்ட்ராக்ட்ர்ஸ் நிறுவனத்தின் கணக்கு எண். 1170115000005180 அந்த கணக்கு சம்மந்தப்பட்ட ஜனவரி 2019 முதல் தற்போது வரையிலான வங்கி பரிவர்த்தனை கணக்குகள் மற்றும் காசோலை எண். 000147 மற்றும் 000165 ஆகியறை திருப்பப்பட்டதற்கான குறிப்புகள். மேற்படி காசோலைகள் அல்லாமல் வேறு ஏதேனும் காசோலைகள் திருப்பப்பட்டுள்ளதா என்றால் அதே நாளில் வேறு 3 காசோலைகள்

திருப்பப்பட்டுள்ளது. அந்த காசோலைகளும் சந்தோஷ்குமாருக்கு வழங்கப்பட்டது.

2) வேறு எந்த காசோலைகளும் 2019 முதல் தற்போது வரை திருப்பப்படவில்லை. மஞ்சு காண்ட்ராக்ட்டர்ஸ் நிறுவனத்தில் குறைந்த பட்ச வரவு செலவாக எவ்வளவு தொகை நடைபெற்றுள்ளது என்றால் ஜனவரி 2019 யில்இருந்து 31 மார்ச் 2020 வரை வரவு மட்டும் 11,60,000/- செலவு 11,60,997.76. நடப்பு கணக்கு பொதுவாக நிறுவனத்தின் பெயரில்தான் வழங்கமுடியும் என்றால் ஆமாம். தனிநபருக்கு வழங்கமுடியாது. நடப்பு கணக்கு காசோலைகள் தனிப்பட்ட நபர் வாங்கிய கடனுக்காக கொடுக்கமுடியுமா என்றால் அந்த நிறுவனத்தின் சார்பாக கொடுக்க வேண்டியதிருந்தால் கொடுக்கலாம்.

3) வழக்கு காசோலை எப்போது எதிரி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். ஒரு நபருக்கு வழங்கப்படும் காசோலையை எத்தனை நாட்களுக்கு உபயோகிக்கலாம் என்றால் 6, 7 வருடங்களுக்கு உபயோகப்படுத்தலாம். ம.சா.ஆ.2 காசோலை எண். 000165 ஒரு செக் புக்கில்குறைந்த பட்சம் 25 முதல் 50 காசோலைகள் இருக்கும்.

**நேரமின்மை காரணமாக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/-எ.கே.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**